REGD. No. M. 6311

PHONE No. 55630

தனி இதழ் ஒரு அணு
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 183

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF THE D.P.F

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

சென்னை: மார்கழி 29உ புதன் (13—1—54) ★ ★ ★ வெளியூர்: தை 1உ வியாழன் (14—1—54)

# 'மக்களை நம்ப மறுக்கும் சர்க்கார்!'

—:X:—

## மாநிலவாரியாகப் பெருந்தொழில்களை நிறுவுவதே சிறப்புடையது!

—[o]—

## மாவட்ட மக்களின் செம்மை உயர அதுதான் வழி!

### தொழில் மூதறிஞர் விஸ்வேஸ்வரய்யா அவர்களின் கண்டிப்பு

பம்பாய் ஜன. 13—

"ஒவ்வொரு மாநில அரசுக்கும், ஒரு திட்டத்தின் கீழ், ஒரு குறிப்பிட்ட அளவு, பெரும் தொழில்களை நடத்துகிற பொறுப்பைத் தர வேண்டும். ஏனெனில், அத்தகு பெரும் தொழில்கள்தான் ஒரு மாநிலத்திற்கோ, ஒரு மாவட்டத்திற்கோ, செல்வத்தையும்-செழிப்பையும் தர முடியும்."

"சில மாநில அரசுகள், தங்கள் பொருளாதார நிலையைப் புதிய தொழிலகங்களை நிறுவுவதன் மூலம் உயர்த்திக் கொள்ள ஆர்வங் காட்டுகின்றன. எவ்விதத் தடையுமின்றி மாநில அரசுகளும், மக்களும், புதிய தொழில்களை நிறுவுவதற்குச் சந்தர்ப்பங்கள் தர வேண்டும். அவர்களைக் கட்டுப்படுத்தலாகாது—ஆலோசனை தரலாம்."

"இந்த அளவிற்குத் தன் மக்களையே இந்திய அரசாங்கம், ஏன் நம்பாமல் போய்விட்டது என்பது, எனக்குப் புரியவில்லை."

என்று, அகில இந்திய உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவரான சர். எம். விஸ்வேஸ்வரய்யா, அச்சங்கத்தின் மூன்றாவது ஆண்டு வருடப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டுவிட்டு, "வளமையையும், பாதுகாப்பையும் வளர்ப்பதற்கு, சிறிய நடுத்தர பெரிய அளவான தொழில்களில், ஒரு திட்டமிட்ட வளர்ச்சி தேவை," என்றார்.

அவர் மேலும் பேசியதாவது:—

"வேறு பல முன்னேற்ற நாடுகளிலெல்லாம், தொழில் வளர்ச்சிக்குத்தான் மிகுந்த முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. அந்த முக்கியத்துவம், இந்தியாவிலும் தரப்பட வேண்டும்."

நாட்டின் இன்றைய உடனடியானதும், வருங்காலத்திற்குமான தேவைகளைப் பற்றிக் குறிப்பிடுகையில், "கல்வி, தொழில்கள் ஆகிய இரு அடிப்படை அம்சங்களில் காட்டப்படுகிற முன்னேற்றம் மகிழ்ச்சிகரமானதாயில்லை என்பதை நான் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும்," என்றார்.

"இந்திய நிலைகளுக்குப் பொருந்திய 36 அல்லது 40 பெரும் தொழில்களில், தன்னுடைய விருப்பப்படி, ஒவ்வொரு மாநில அரசும், ஒரு குறிப்பிட்ட அளவு எண்ணிக்கையுள்ள தொழிலை நன்கு திறமையுடன் நடத்த வேண்டும் என்பது ஒரு நல்ல சிபாரிசு."

தேவைப்படும் வழிவகைகள் இல்லாததாயிருக்கலாம். ஒரு மாநில அரசிற்கு மூன்று அல்லது ஒரு அளவு தொழில்கள் அதற்குத் தரப்பட்டிருந்தால், தேவைப்படும் அளவு பணமும், இராவசதிகளும் கிடைக்கும்வரை. ஒரு மாநில அரசு அத்திட்டங்களை, தனது தொழில் நிபுணர்களின் ஆராய்ச்சிக்கு விட்டுவைக்கலாம்.

இந்தியா தனது துரிதமான வளர்ச்சிக்கு, பன்னிரண்டிற்குச் சரியான பெரும் தொழில்களை திறமையோடு நடத்த நேர்ந்தெடுக்க வேண்டும்," எனவும் அவர் குறிப்பிட்டார்.

சமீபத்தில், இந்திய அரசாங்கம், ஆண்டொன்றுக்கு 500,000 டன்கள் இரும்பு உற்பத்தி செய்வதற்காக, ஜெர்மனியக் கம்பெனி ஒன்றுடன் செய்துள்ள ஒப்பந்தத்தைக் குறிப்பிட்டு, தாங்களே தங்களுக்குத் தேவையான இரும்பை உற்பத்தி செய்து கொள்ளும் முறையில் அரசாங்கங்கள் அத்தொழிலை இங்குள்ள ஏதாவதொரு கம்பெனியிடம் தந்திருக்கலாம். அத்தகு ஒரு ஏற்பாடு, உள்நாட்டுத் திறமை, பிரசித்திபெற்ற நிபுணர்களாகவும், தொழில் நுணுக்கமுடையவர்களாகவும், வெளிப்பட சந்தர்ப்பங்களையும் உண்டுபண்ணித் தந்திருக்கும்.

### 3½ கோடி ரூபாயில் கட்டிடம்!

பம்பாய், ஜன. 13—

பம்பாயில் ஸ்டாண்டர்ட் வாகுவம் ஆயில் கம்பெனி சொந்தமாகக் கட்டப்போகும் கட்டிடம் ஆசியாவிலேயே நவீனமானதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 71,000 சதுர அடி விஸ்தீரணத்தில் கட்டிடம் எழும்பவிருக்கிறது. கட்டிடம் கட்ட மூன்றரை கோடி ரூபாய் செலவாகும்.

## ஆஸ்திகர் முகத்தில் கரி!

### பிள்ளையார் உடைப்பு வழக்கில் பெரியார் வெற்றி வாகை!

திருச்சி, ஜன. 12—

திருச்சி செஷன்ஸ் நீதிபதி பி. டி. ராமன் நாயர், டிவிஷனல் முதல் மாஜிஸ்திரேட் செய்த தீர்ப்பை ஊர்ஜிதம் செய்து, பிள்ளையார் சிலை உடைப்பு சம்பந்தமாக திராவிட கழகத் தலைவர் பெரியார் ராமசாமி அவர்கள் மீது செய்யப்பட்ட அப்பீல் மனுவைத் தள்ளுபடி செய்தார்.

நீதிபதி தமது தீர்ப்பில், பிள்ளையார் உருவம் வழிபாட்டிலுள்ள கடவுள் உருவமாகாது என்றும், அவர் அதை எப்படி வேண்டுமானாலும் உபயோகப்படுத்தவோ அல்லது அழிக்கவோ செய்யலாமென்றும் கூறினார்.

நாஸ்திக ஒழிப்புக் கமிட்டிச் செயலாளர் வீரபத்திர செட்டியார் இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

## இளம்பரிதி வாழ்க!

[கவிஞர் - வாணிதாசன்]

★

தென்னாட்டு மாமணியே!
திராவிடனே இளம் புலியே!
சிறுத்தை ஏறே!

உன்னாட்டைத் திராவிடத்தை
ஒப்பில்லாத் தமிழ் நாட்டைத்
தாயகத்தைத்

தின்னவந்த பகைநொறுக்கி
இருள்கிழித்துச் செங்கதிரோன்
கிழக்கில் வந்தான்!

என்னென்பேன்! பொன்! பொன்! பொன்!
இளம்பரிதி வாழ்க! தமிழ்ப்-
பொங்கல் வாழ்க!

இன்றுவந்த புதியகல்வி
முதலமைச்சர் கைச்சரக்கு!
விளைவைக் கண்டார்;

பொன்றாத செயலிதுவாம்;
படைப்பலத்தால் புவியாட்சி
நிலைத்த துண்டோ?

இன்று பிறந்த தைப்பொங்கல்
திராவிடரின் தனிப்பெருநாள்!
இந்நன் னாளில்

நன்றில்லாத் திட்டங்கள்
எதுவரினும் நாமெதிர்ப்போம்
உறுதி கொள்ளே!!

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

## ஆச்சாரியார் புதிய கல்வித் திட்டம்!

### மாற்றி அமைக்க ஆந்திர சர்க்கார் யோசனை

கர்னூல், ஜன. 12—

ஆந்திராவுக்கு புதிய கல்வித் திட்டம் ஒன்றை வகுப்பதற்காக ஒரு கமிட்டி நியமிப்பதென ஆந்திர சர்க்கார் தீர்மானித்திருக்கின்றனர். சென்னை சர்க்காரின் புதிய ஆரம்பக் கல்வித் திட்டம், தான் அங்கு அமுலில் இருந்து வந்தாலும், நேற்று இங்கு நடைபெற்ற மந்திரி சபைக் கூட்டத்தில் அதை மாற்றியமைக்கும் விஷயமாக ஆலோசிக்கப்பட்டது. இதனால் ஒரு புதிய திட்டம் உருவாகுமெனச் சொல்லப்படுகிறது.

இதற்காக ஏற்படுத்தப்போகும் கமிட்டி அதுபற்றிய அறிக்கையை மார்ச் 31-ம் தேதிக்குள் சமர்ப்பிக்கும்.

### தியாகராய நகர் மதுவிலக்கு வழக்கு

சென்னை, ஜன. 13—

மாணிக்கவேரி லட்சமணன் செட்டியார் என்பவர்மீது சென்னை பிரசிடென்சி மாஜிஸ்திரேட் கோர்ட்டில் நடைபெறும் மதுவிலக்கு வழக்கில் சட்டத்தின் சில விதிகள் செல்லாதென்றும், ஆகவே, இதை, ஐகோர்ட்டின் பரிசீலனைக்கு விடவேண்டுமென்றும், எதிரியின் சார்பாக ஆட்சேபணைகள் எழுப்பப்பட்டன.

வழக்கு விசாரணையில் காலதாமதமேற்படுவதைத் தவிர்ப்பதற்காக சட்டபூர்வமான ஆட்சேபணைகளை ஐகோர்ட்டுக்கு அனுப்ப மாஜிஸ்திரேட் சம்மதித்தார்.

## தேர்தல் கடலாழங்கண்ட ஆதித்தனுடன் போட்டியிடுவதற்கு ஜோதி தயாராகிறது?

### தேதி குறிப்பிடாததற்கு முன்பே தேர்தல் காற்றடி விடப்படுகிறது!

'தேர்தல் செல்லாது,' என்று தீர்ப்புக் கூறப்பட்ட சாத்தான்குளம் அசெம்பிளிக் தொகுதிக்குப் போட்டியிட உத்தேசித்திருக்கும் தோழர் ஆதித்தனுக்கு எதிராக, காங்கிரஸ் வட்டாரத்திலிருந்து, மதுவிலக்கு—அரிஜன மந்திரி ஜோதி அம்மையார் நிறுத்திவைக்கப்படலாம் என்ற செய்தி உலவுகிறது.

சாத்தான்குளம் தொகுதியில், பல நாட்களுக்கு முன்பிருந்தே, கஞ்சித் தொட்டிகளுக்கு நன்கொடை தந்து, பூர்வாங்கத் தேர்தல் ஏற்பாடுகள் செய்த தோழர் ஆதித்தன் அங்கு, தேர்தலுக்கு மிகத் தீவிரமாக முயற்சித்து வருகிறார்.

காங்கிரஸ் கட்சி சார்பில் மந்திரியாகவும், அரிஜனப் பிரதிநிதித்வம் பெற்ற மந்திரியாகவும் விளங்கும் ஜோதி அம்மாளை, தேர்தலில் போட்டியிடச் செய்யலாம் என ஆலோசித்து வருகிறார்களாம்.

தவிர, சாத்தான்குளம் தொகுதியில் உள்ள அரிஜன வோட்டுகள், ஜோதி அம்மாளுக்குக் கிடைக்கக்கூடும் என்றெண்ணத்தினால், அவரை நிறுத்தி வைப்பதே சரியென்றும், பல காங்கிரஸ்வாதிகள் அபிப்பிராயப்படுகின்றனராம்.

—வி. ஆ.

[தோழர் ஆதித்தன், அந்தத் தேர்தலில் நின்றால், பனைவரிக்குப் பதில் போடப்பட்டுள்ள புஞ்சை வரியைத் தேர்தல் பிரச்சினையாக வைத்து, அவரைத் தோற்கடிக்க, காங்கிரஸ் அமைச்சர் குழு தயார் என்று சென்னை மேல் சபையில் நிதி அமைச்சர் சுப்பிரமணியம் சில காலத்துக்கு முன்பு அறிவித்தது [illegible]]

# நம் நாடு

திமுகத்தின் இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 13—1—1954 புதன்


# பொங்கலோ! பொங்கல்!

பொதுவாக திராவிடருக்கும், சிறப்பாக தமிழ் உழவர் பெருமக்களுக்கும், நினைக்க, உள்ளம் பூரிப்பைத் தருவதும், கேட்க, இன்னிசை அமுதாக செவிக்கு இனிப்பதுமான பொங்கல் பெருநாள் பிறந்துவிட்டது. அவர் இடுக்கண்கள் அகலட்டும்—தொல்லைகள் தொலையட்டும்—துன்பங்கள் நீங்கட்டும்!

அவல வாழ்வு அழியட்டும்—அச்சம் விலகட்டும்—மன மாசு மாளட்டும்!

வளம் பல பெருகட்டும்—செம்மை சிறக்கட்டும்—புது வாழ்வு கிட்டட்டும்—புது நிலை உருவாகட்டும்!

சீரழிவு மறைந்து, செல்வச் சிறப்பெய்தட்டும்! சினம் தவிர்த்த சீர்மை கண்டு வாழட்டும்! தன்னுயிர்போல் மன்னுயிரையும் மதிக்கும் முழு மனிதப் பண்பு வளர்ந்தோங்கட்டும்!

சென்ற சில நாட்களில், வெறும் நீரை அடிப்பேற்றி, தாகவிடாய் தீருவதற்கும் வகை காணாது, விழி பிதுங்க விழித்துக் கிடந்த உழவர் பெருமக்கள், நீர்நிலை பலவும் நிறைந்திருப்பதைக் கண்டால், அவர்கள் களிப்பேருவகை எய்தாமல் இருப்பரோ! ஒருக்காலும் இரார்.

வானத்து நீரை நம்பி, கடன்பட்டு விதை கொண்டு, புழுதியிலே புதைத்துவிட்டு, 'அந்தோ! ஐயகோ!' என்று சில திங்கள் கழிக்கக் கதறி, நீர் இன்றி உருப்புலர்ந்த கண்கொண்ட உழவர் மக்கள், உடம்பு புலர்ந்து, உள்ளம் நைந்து, உயிர் காக்க உளங்கொண்டு, வேறூர்க்கு ஊர்ந்து செல்லும் நேரத்தில், வரப்புடைத்த வாய்க்காலும்-வயலும் வழிந்தோட, வானம் பிளவுபட்டு, வெள்ளப் பெருக்கெடுத்து ஓடுகிறது எனும் செய்தி கேட்டால், மகிழ்ச்சியைக் கோலாக்கி, எழுச்சியும் உரமாக்கி, புள்ளிமான் போல துள்ளி ஒரு தாண்டில் ஊரடைந்து, பார் காக்கும் பெரும் உழவர் கூட்டம், வடம் பாய்ந்து, ஏர் பிடித்து, விதைத் தூவி பயிர் கண்டு, பின்னர் கதிர் கண்டும், களத்திலே அம்பாரம் கண்டும், பனை ஓலை எரித்து அடுப்பேற்றி, பானை வைத்து, பாலூற்றி, மனம் நிறைந்த உரி நீங்கி வெண்மணிச் சோறும் பொங்கி வழிவதைக் கண்டு, அந்த உழவர் உள்ளங்கள் பூரிப்பால் பொங்காதா? — இன்று கிராமத்து உழவரில் பெரும்பாலோர் நிலை இதுதான் எனக் கூறுவது, எளியும் மிகையாகாது.

சென்ற சில ஆண்டுகளாக அவர்கள் எற்றுவந்த அல்லல், கொஞ்சம் நஞ்சமல்ல! நாக்காட்டின் எல்லைக்கோட்டிலேயே அவர்கள் முகாமிட்டுக் கொண்டிருந்தனர் என்பது தான், மிகமிகப் பொருத்தமுடையதாகும். இந்நிலை, கொஞ்சம் தேய்ந்திருக்கிறது. வானம் அதற்கும் பெருந்துணை புரிந்திருக்கிறது. இந்த,

இயற்கை செய்த உதவியால், கால் வயிறு கஞ்சியாவது குடிக்கலாம் என்ற நம்பிக்கை, உழவர் பெருமக்களுக்குப் பிறந்திருக்கிறது. ஆனால், வைத்தறி நெசவாளர்களுக்கு இப்போதும் அந்த நிலை ஏற்படவில்லை. வறுமையின்பால், அவர்கள், வறுமைக் கடலுள் ஆமிழ்ந்து கிடக்கின்றனர். அவர்களுக்கு வாழ்வளிக்கக் கடமை கொண்டுள்ள ஆளவந்தார்களோ, வசை—இசை ஆகிய இரண்டு கலைகளைப் பயிலுவதிலேயே காலங்கழிக்கும் கேலி பாப்பவர்களாக உள்ளனர்.

நெசவாளரின் சாதாரண அழுகுரல், கண்ணாடிக் கோட்டையில் உள்ள காங்கிரஸ் கனபாடிகளின் காதுகளில் விழ மறுக்கிறது. அவர்களுடைய எலும்புருவத்தின் கோரக் காட்சியைக் காண மனங்கொள்ளாது, கண்ணாடிக் கோட்டைக்குள்ளிருப்போர், எலும்புருக்களைத் தங்கள் பார்வையிலிருந்து அகற்ற, அவர்கள் மீது, அடக்குமுறைகள் எனும் கருங்கற் பாறைகளை, எடுத்தெடுத்து, அடுத்தடுத்து வீசுகின்றனர். கூடிய விரைவில், காங்கிரஸ் அமைச்சர்களுக்குப் பாதுகாப்பாக உள்ள கண்ணாடிக் கோட்டையும் தூள் தூளாகப் போகப் போவது நிச்சயம். அவர்கள் வீழ்ச்சிக்கு, அவர்களுடைய அடக்குமுறை வெறிச்செயலே, காரணமாகப் போகிறது.

சிங்காதனம் ஏறிய சிறுமதி படைத்தவர், சீரழிந்து போன வரலாற்றுக் கதை ஏராளம். அந்த வரிசை ஏட்டில், பேயாட்டம் போடும் ஆச்சாரியார் ஆட்சி, ஒரு சிற்றேடு! அவ்வளவுதான்! விட்டுத் தள்ளுங்கள்!!

சென்ற ஆண்டுகள்போல் அல்லாமல், சிறிய அளவாவது நலம் பெற்றுள்ள உழவர் மக்கள், கைத்தறியாளரின் வறுமைத் தேய வழிசெய்தாக வேண்டும். 'அவர்களும், நாம் பெற்ற இன்பத்தில் கொஞ்சம் பெறட்டும்,' என்ற பெருமதி கொள்ள வேண்டும். அவரும் நம்முடன் பிறந்தவர்—நம்மினம். உடன் பிறந்தாரை பிச்சையேற்க விட்டுவிட்டு, பொங்கி தினி தின்று, உடல் வளர்ப்பது, தமிழ் மரபு அல்ல என்பதை, உழவர் மக்கள், இந்தப் பொங்கல் பெருநாளில் நினைத்துப் பார்க்க வேண்டும். கைத்தறி ஆடையே உடுத்துவது என்று குறுதுணைத்துக் கொள்ள வேண்டும். மன மிலைதான் மார்க்கமுண்டு.

அப்பொழுதுதான், உழவர் வீட்டில் மகிழ்ச்சிப் பொங்குவது போன்றே, கைத்தறியாளர் உள்ளங்களிலும், மகிழ்ச்சி, குறைந்தளவாவது தோன்ற இடமேற்படும். இல்லையேல், உடன் பிறந்தோர் பட்டினி கிடந்து சாக, வடநாட்டு வஞ்சகனுள்ளர் வாழ, வழி செய்தனர், பொங்கல் புது நாளில், நம் தமிழர், என்ற பழிச்சொல், நம்மை வந்து சாரும். இந்த மாப்பழிக்குத் தங்களை ஆளாக்கிக் கொள்ளுவதைத் தமிழர்கள் விரும்பமாட்டார்களென்றே நம்புகிறோம்.

வடவர் ஆதிக்கமெனும் இருள் நீங்கி, உரிமை எனும் எழு ஞாயிறு தோன்றும் நாளே, நம்மரும் திராவிடத்தில்; சுதந்திரப் பொங்கல் கொண்டாடப்படும் நன்னாள் ஆகும். திராவிட நாடு விரைவில் காண, கைத்தறி புத்தம் புனைந்து, 'பொங்கலோ! பொங்கல்' என்று குரல் எழுப்பி, குறுணைத்துக் கொள்ளுவோம், வாரீர், தமிழர்காள்—திராவிடர்காள்!

# திருச்சியில் பொதுச் செயலாளர்

—( : )—

## மழை பெய்வதையும் பொருட்படுத்தாமல் 50,000 மக்கள் கூட்டம்

திருச்சி, ஜன. 11—

திருச்சியில் 10—1—54 மாலை 6 மணிக்கு திருச்சி டவுன் ஹால் முன்பு சிறை சென்று மீண்ட தி. மு. கழகத் தலைவர்களுக்கு திருச்சி மாவட்ட தி. மு. கழகத்தின் சார்பில் வரவேற்பளிக்கப்பட்டது. அன்று காலையிலிருந்து திருச்சியில் மழை பெய்து கொண்டிருந்த போதிலும், மாலை 5 மணிக்கே மழையையும் பொருட்படுத்தாமல் சுமார் 50,000-த்திற்கு மேற்பட்ட மக்கள் குழுமியிருந்தனர்.

மழையிலே நனைந்து கொண்டு பொதுச் செயலாளர் பேசிய போது, பொது மக்களும் நனைந்துகொண்டு மிக ஆர்வமாகக் கேட்டனர்.

மாலை 5 மணிக்கு தோழர்கள் அண்ணாதுரை, இரா. நெடுஞ்செழியன், மதியழகன், நடராசன் ஆகிய தலைவர்கள் மேடைக்கு வந்துவிட்டனர்.

தலைவர்களைக் கண்டதும் மக்கள் வெள்ளம், 'அண்ணா வாழ்க; திராவிட நாடு—திராவிடருக்கே', என்று முழங்கினர்.

கூட்டத்திற்கு தோழர் ஏ. பி. ஜனார்த்தனம் தலைமை வகித்து, தலைவர்களை வரவேற்றுப் பேசிய பின், திருச்சி மாவட்டக் கழகத்தின் சார்பிலும், திருச்சி 20-வது வட்டாரக் கழகத்தின் சார்பிலும், திருச்சி மாணவர் தி. மு. கழகத்தின் சார்பிலும் வாழ்த்துப் பத்திரங்கள் வாசித்தளித்த பின், திருச்சி மாவட்ட தி. மு. கழகம், நகர தி. மு. கழகம், மாணவர் தி. மு. கழகம், தலைப்பபாளையம் வட்டார தி. மு. கழகங்கள், கண்டம்பட்டி தி. மு. கழகம், அரும்பனூர் தி. மு. கழகம், ரேப்பூர் தி. மு. கழகம், கட்டிங்பட்டறை தொழிலாளர் சங்கம், கடை பீடி தொழிலாளர் சங்கம், சுருட்டு—பீடி தொழிலாளர் சங்கம், பன்னும் கொம்பு தி. மு. கழகம், பொன்மலை தி. மு. கழகம், செருர் தி. மு. கழகம், திருவானைக்காவல் தி. மு. கழகம், திருச்சி மன்றம், தோழர் தங்கவேலு, உறையூர் தி. மு. கழகம், மற்றும் பல கிளைகளின் சார்பில் மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன.

திருச்சி பெரிய கடைவீதி தி. மு. கழகத்தின் சார்பிலும், தோழர் ஏ. நடராசன் (ஷாப் கடை) சார்பிலும், தலைவர்களுக்கு வெள்ளித் தட்டுகள் போடப்பட்டன.

போட்டோகிராபர் மாணிக்கம், அத்தனக்குடி கிதிக்காக, கல்லக்குடி போராட்ட படங்களை (100) அன்பளிப்பாகக் கொடுத்தார்.

பின் தோழர் என். வி. நடராசன், மதியழகன், நெடுஞ்செழியன் ஆகியோர் பாராட்டுதலுக்கு நன்றி தெரிவித்துப் பேசியபின், பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் 1 மணி நேரம் சொற்பொழிவாற்றினர்.

பின் நகர செயலாளர் எம். எஸ். மணி நன்றி தெரிவிக்க கூட்டம் முடிவுற்றது. (ஏ. தி)

---

## அறிவிப்பு

14—1—54 அன்று, 'திராவிடர் திருநாள் குறித்து, 'நம் நாடு' அலுவலகத்திற்கு விடுமுறையாதலால், சென்னை 14-1-54; வெளியூர் 15-1-54 தேதியிட்ட 'நம் நாடு' இதழ் வெளி வராது என்பதை அறிவித்துக் கொள்ளுகிறோம்.

—பொறுப்பாளர்.

---

## சுகாதார முறையில் சுகமாக வாழ வழி

### இந்திய சுகாதார மந்திரி அறிவிப்பு

புதுடில்லி, ஜன. 13—

"சுகாதார முறையில் பூரண சுகத்துடன் வாழ வழி என்ன என்பதைப் பற்றி பொது மக்களுக்கு ஆலோசனை கூற ஒரு ஸ்தாபனம் சீக்கிரத்தில் ஏற்படுத்தப்படும்," என்று இந்திய சுகாதார மந்திரி ராஜகுமாரி அமிருத கௌரி கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

"உணவுப் பொருள்களில் கலப்படம் செய்யப்படுவதைத் தடுக்கவும், கண்டு பிடிக்கவும், மத்திய உணவு லேபாரட்டரி ஆரம்பிக்கப்படும். 5 ஆண்டுத் திட்டத்தில் சுகாதாரத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூ 99,55,00,000ல் மத்திய சர்க்கார் பங்கு ரூ 17,87,00,000 ஆகும்.

குஷ்ட ரோக ஆராய்ச்சிக்காக 15 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. சென்னையில் இந்த ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு, பின்னர், இதர மாநிலங்களுக்கு அது விஸ்தரிக்கப்படும்.

கிராமங்கள் உட்பட நாடெங்கிலுமே நல்ல குடி தண்ணீர் ஏற்பட மத்திய சர்க்கார் திட்டம் வகுத்துள்ளது."

---

## செஞ்சிலுவைச் சங்கத்தின் நன்கொடை

சென்னை, ஜன 12—

இந்தோனேஷிய செஞ்சிலுவைச் சங்கம், சென்னை செஞ்சிலுவைச் சங்கத்திற்கு 567 மூட்டை சோளம், 200 மூட்டை பச்சைப் பயிறு, 110 மூட்டை கடலைக் கொட்டை ஆகியவைகளைப் பரிசாக அனுப்பியுள்ளது. இவைகள், திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை, கோவை மாவட்டங்களில் விநியோகிக்கப்பட்டன. சென்னை நகரிலுள்ள அநாதாலயங்களும் இவைகளில் ஒரு பங்கைப் பெற்றுள்ளன.

---

## தெரிந்து கொள்ளுங்கள்

புதுடில்லி, ஜன. 12—

1. சமுதாய அபிவிருத்தித் திட்டங்களின் வேலை நடைபெற்ற முதல் ஆண்டில், (1952 அக்டோபர் மாதத்திலிருந்து 1953 செப்டம்பர் மாதம் வரை), அத்திட்டங்களுக்குப் பொது மக்களிடமிருந்து கிடைத்த தொகை 1 51 கோடி ரூபாயாகும்; திட்டங்களுக்கு சர்க்கார் தரப்பில் செலவான மொத்தத் தொகை 1 95 கோடி ரூபாய்.
2. தபால்-தந்தி இலாகா, தினந்தோறும் சுமார் 35 மொழிகளில் விலாசமுள்ள 70 லட்சம் தபால் இனங்களைக் கையாளுகிறது. அவைகளில் சுமார் 345 தபால்கள் விலாசமில்லாமலே போடப்படுகிறவையாகும்.
3. "டெலிபோனை சொந்தமாக்கிக் கொள்ளும் திட்ட"த்தின் கீழ், 1953 நவம்பர் மாதம் இறுதிவரை, மொத்தம் 3,82,78,000 ரூபாய் வசூலாகியுள்ளது; மொத்தம் 15,766 டெலிபோன் இணைப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.
4. மத்திய டிராக்டர் நிலையம், 1954-ம் ஆண்டு முடிவுக்குள்ளாக சுமார் 10 லட்சம் ஏக்கரா நிலத்தை மீட்டுப் பண்படுத்திவிடும்.
5. இந்திய ரயில்வேக்களுக்கு, சிற்றுண்டிச் சாலைகளும், விற்பனை நிலையங்களும் உட்பட தனியார் பொறுப்பில் நிர்வகிக்கப்பட்டு வரும் உணவு விநியோக நிலையங்கள் மூலம் ஆண்டுதோறும் சுமார் 25 லட்சம் ரூபாய் வருமானமாகக் கிடைத்து வருகிறது.

---

## அரிஞ்சிப்பட்டியில் தி. மு. கழகக் கட்டிடத் திறப்பு விழா — பொதுக்கூட்டம்

### தோழர் சம்பத் சொற்பொழிவு

8—1—54-ல், அருர் தாலுக்கா 'பி'—அரிஞ்சிப்பட்டி கிராமத்தில், தி. மு. கழக கட்டட திறப்பு விழாவும், பொதுக் கூட்டமும் நடைபெற்றது. தோழர் கே. சித்தக் கவுண்டர் தலைமை வகித்தார். பெரம்பிடி, பாப்பிரெட்டிபட்டி, வெங்கடசமுத்திரம் ஆகிய கிராமங்களிலிருந்தும், கழகத் தோழர்கள் கலந்துகொண்டனர். ஈரோடு தோழர் எஸ். அப்பாவு அவர்கள், கழகக் கொள்கைகள் குறித்தும், நாட்டுவிடுதலை குறித்தும் பேசினார்.

பின்னர் தோழர் ஈ. வே. கி. சம்பத் அவர்கள், அக்கிராமத்தில் கழகத் தோழர்கள் தங்களை சொந்த முயற்சியில் கழகத்திற்கு சொந்தமான கட்டடம் கட்டியிருப்பதைப் பாராட்டியும், விஞ்ஞானம் வளர்ச்சி அடைந்துள்ள விதங்களை எடுத்துக் கூறியும், தி. மு. கழகம் சமுதாய, பொருளாதாரம், அரசியல் இவைகளில் கொண்டுள்ள கொள்கைகள் குறித்தும், கழக இலட்சியமான நாட்டுப் பிரிவினையின் அவசியம் குறித்தும், ஆச்சாரியாரின் புதிய கல்வித் திட்டத்தின் கேடுகள் பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

---

## சமயநல்லூர் தி. மு. கழகம் (கிளை)

28—12—53ல், தோழர் வி. எஸ். மணி தலைமையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில், தோழர் இராமச்சந்திரனை செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

# தூத்துக்குடி சதி வழக்கு விசாரணை

திருநெல்வேலி ஜன. 13—

தூத்துக்குடி சதி வழக்கு விசாரணை, விசேட முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் திரு. எஸ். அகிலா அய்யர் முன்பு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. சர்க்கார் தரப்பு சாட்சியங்களின் விவரம் தொடர்ந்து தரப்படுகிறது:—

## 67-வது சாட்சி

பல்ராஜ் என்பவர் 67-வது சாட்சியாக விசாரிக்கப்பட்டார். அவர் கூறியதாவது:

“நான், தூத்துக்குடியில் பர்மனென்ட்வே இன்ஸ்பெக்டராக இருக்கிறேன்; ஜூலை 15-ந் தேதியன்று கோயமுத்தூர் பாசஞ்சர் வண்டியில் பிரயாணம் செய்தேன்; இந்த வண்டி காலை 6-25 மணிக்கு, தூத்துக்குடியிலிருந்து கிளம்பியது; வண்டி மேலூர் ஸ்டேஷன் சேருவதற்குள், வழியில் அபாயச் சங்கிலியை இழுத்ததால் வண்டி நான்கு தடவை நின்றுவிட்டது; இந்த வண்டியில் போலீசாரும் பிரயாணம் செய்தனர்; ரயில்வே உதவி என்ஜினியரின் உத்தரவுப்படி, வாக்குவம் பிரேக் விடப்பட்டு, வண்டி, மேலூர் வந்து சேர்ந்தது; அது மீண்டும் புறப்பட்டது; ஆனால், 405/10 மைலில் வண்டி நின்றுவிட்டது; நான், வண்டியிலிருந்து இறங்கினேன்; என்ஜினுக்கு முன்பாக ரயில் பாதையில் 100 அல்லது 200 பேர் உட்கார்ந்திருந்ததைப் பார்த்தேன்; பாதையின் இரண்டு பக்கங்களிலும் ஏராளமான ஜனங்கள் காணப்பட்டனர்; பாதையில் உட்கார்ந்திருந்தவர்களை எழுந்து போய்விடும்படி போலீஸ் உதவி சூப்பிரண்டெண்டு மன்றாடிக் கேட்டுக் கொண்டார்; ஆனால், அவர்கள் போகவில்லை; பிறகு போலீசார் தடிகொண்டு அடித்தனர்; ரயில் வண்டி மீது கற்கள் எறியப்பட்டன; நான் வண்டிக்குள் ஏறிக்கொண்டு ஜன்னல் கதவுகளை மூடிவிட்டேன்; பிறகு துப்பாக்கிகளினால் சுடும் சத்தம் கேட்டது; இதற்குச் சிறிது நேரம் கழித்ததும், நான், ஜன்னல் கதவுகளைத் திறந்தேன்; எட்டையபுரம் ரோட் சமீபம் உள்ள லெவல் கிராசிங்கில், ரயில் பாதை அருகே, ஏராளமான பேர் நின்றுகொண்டிருந்ததை நான் கண்டேன்; என்ஜினுக்கு முன்பாக சுமார் நூறு பேர் உட்கார்ந்திருந்தனர்; உடனே நான் ஜன்னல் கதவுகளை மூடினேன்; மறுபடியும் துப்பாக்கிகளினால் சுடும் சப்தம் காதில் விழுந்தது; வண்டி மேலும் புறப்பட்டு மணியாச்சிக்குச் சென்றது; தூத்துக்குடிக்கும் மீளவிட்டானுக்குமிடையே மூன்று ரயில் பாலங்கள் எரிக்கப்பட்டு விட்டதாக தூத்துக்குடி ஸ்டேஷன் சூப்பிரின்டெண்டிடமிருந்து எனக்கு ஒரு தந்தி கிடைத்தது; ஒரு உதவி என்ஜினியருடன், ஸ்பெஷல் வண்டியில் சென்றேன்; குறித்த இடத்துக்கு போனேன்; 29-ம் நெம்பர் வாராவதி மட்டும் பாதிக்கப்பட்டிருந்ததைப் பார்த்தேன்; இரண்டு ஸ்லீப்பர்கள் பூராவும் எரிக்கப்பட்டிருந்ததைப் பார்த்தேன்; பாதையிலிருந்த 19 சாவிகளைக் காணவில்லை; என்னுடைய ஆட்கள் பிற்பாடு அவற்றைக்கொண்டு வந்தனர்; இந்தச் சாவிகள் இல்லாதிருந்தபோது ரயில் வண்டி போயிருக்குமானால், அது பாதையிலிருந்து இறங்கி கவிழ்ந்திருக்கும்; விளைவு விபரீதமாக இருந்திருக்கும்; தண்டவாளத்தை அழுத்தமாகப் பிடித்துக் கொண்டிருக்கும் மூளைகள்தான் சாவிகள் எனப்படுவது; போலீஸ் சாக்கின் இன்ஸ்பெக்டர் என்னை விசாரித்தார்.”

வழக்கறிஞர் பி. ஏ. தங்கசாமியால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது சாட்சி கூறியதாவது:

“தண்டவாளத்துக்கு அடியே மரச்சாவிகளினால் அவை பிணைக்கப்பட்டிருக்கின்றன; இவை, கெட்டியாக இருந்த பாதையில் காணப்படவில்லையே ஒழிய வாராவதிப் பாதையில் அல்ல; இவை பாதைக்கு மேற்குப் பக்கத்தில் கிடந்தன; சாவிகள் அப்புறப் படுத்தப்பட்டிருந்தாலே பன்றி ஸ்லிப்பர் சட்டிகள் அப்படியே தானிருந்தன; சாவிகள் அப்புறப் படுத்தப்பட்டிருந்ததே ரயில் கவிழ்வதற்குப் போதுமானது.”

## 68-வது சாட்சி

கே. எஸ். குழந்தைவேலு 68-வது சாட்சியாக விசாரிக்கப்பட்டார். அவர் கூறியதாவது:

“ஜூலை 15-ந் தேதி காலை 6-25 மணிக்கு தூத்துக்குடியை விட்டுப் புறப்பட்ட ரயில் வண்டியில் நான் கார்டாக வேலை பார்த்தேன்; (சாட்சி மேலூர் ரயில்வே ஸ்டேஷனில் நடந்த சம்பவங்களை விவரித்தார்.) என்ஜினின் கண்ணாடிகளும், மூன்று ஜன்னல் கண்ணாடிகளும் கூட்டத்தினரால் சேதப்படுத்தப்பட்டன; நான் கேட் ஸிப்பர் அறையில் புகுந்து கொண்டேன்; போலீசார் தடிகொண்டு அடித்தது என் காதில் விழுந்தது; பிறகு, துப்பாக்கியினால் சுடும் சப்தமும் கேட்டது; நான் அறையிலிருந்து வெளியே வந்தபோது, கூட்டத்தினர், மேற்குப் பக்கமாக ஓடுவதைப் பார்த்தேன்; பிறகு வண்டி புறப்பட்டுச் சென்றது; சம்பவம் பற்றி டில்லி போக்குவரத்து சூப்பிரண்டெண்டுக்கு ரிப்போர்ட் செய்தேன்; ஸ்பெஷல் டியூடி சர்க்கிள் இன்ஸ்பெக்டர் என்னை விசாரித்தார்; மேலூர் ரயில்வே ஸ்டேஷன் அருகே ரயில்பாதை மீது உட்கார்ந்திருந்தவர்களின் தலைவரை நான் அடையாளம் காட்ட முடியும்; 5-வது எதிரி நடராஜன்தான் அவர்கள் தலைவர் (எதிரியைச் சாட்சி சுட்டிக் காட்டினார்.)

வழக்கறிஞர் பி. ஏ. தங்கசாமியால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது சாட்சி கூறியதாவது:—

“ரயில் வண்டி தூத்துக்குடியிலிருந்து புறப்பட்டபோது, கூட்டத்தினர் பலாத்காரத்தில் இறங்குவர் என்று நான் எதிர்பார்க்கவில்லை; அபாயச் சங்கிலி இழுக்கப்படுவதன் மூலம் ரயில் வண்டி அடிக்கடி நிறுத்தப்பட்டது; சிலரைப் போலீசார் கைது செய்தனர்; பாதைமீது உட்கார்ந்திருந்தவர்களில் சிலர் பாதைமீது படுத்துக் கொண்டிருந்தார்கள்; பாதைமீது உட்கார்ந்திருந்தவர்கள்தான் வண்டிமீது கற்களை எறிந்தனர் என்று நான் நிச்சயமாகச் சொல்ல முடியும். ‘உங்களுடைய தலைவர் யார்?’ என்று அவர்களை நான் கேட்டேன்; அவர்கள் 5-வது எதிரி நடராஜனைக் காட்டினார்கள்; அதற்கு முன்பு எனக்கு நடராஜனைத் தெரியாது; போலீஸ் லாரியிலிருந்து விடுதலையடைந்தபின் கலெக்டரின் கோரிக்கைக்கு இணங்க கூட்டத்தினரைப் போய் விடும்படி 5-வது எதிரி சொன்னார்; ஆனால், அவர்கள் போகவில்லை; என்னுடைய கோரிக்கைக்கு இணங்க அவர்களைப் போய்விடும்படி 5-வது எதிரி கேட்டுக் கொள்ளவில்லை; காலை 8 மணி வரையில் அவர்கள் அங்கு இருப்பார்கள் என்று 5-வது எதிரி எனக்குப் பதில் அளித்தார்; போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் என்னை விசாரணை செய்து, நான் சொன்னவற்றைக் குறித்துக் கொண்டார்; போலீசார் சுட்டதற்குப் பிறகுதான் கூட்டம் கலைந்தது.”

சாட்சியை வழக்கறிஞர் திரு. பி. எஸ். கந்தய்ய பிள்ளையும் குறுக்கு விசாரணை செய்தார்.

## 69-வது சாட்சி

ஆர். எம். கே. கருப்பசாமி பண்ணையார் அடுத்த சாட்சியாக விசாரிக்கப்பட்டார். அவர் கூறியதாவது:—

“புதுக்கிராமம் வக்கீல் பத்மநாபய்யரின் கட்சிக்காரன் நான்; ஜூலை 15-ந் தேதியன்று நான் வக்கீல் வீட்டிற்குச் சென்றேன்; அப்போது காலை மணி 8 இருக்கும்; 9 மணி சமாருக்கு கோஷமிட்டுக் கொண்டும், கற்களை வீசிக்கொண்டும் தெருவில் ஒரு ஜனக்கூட்டம் வந்தது; அச்சமயம், வக்கீல், கல்லூரிக்குப் புறப்பட்டுச் சென்றுவிட்டார்; நானும், வக்கீல் குமாஸ்தாவான 24-வது பிராசிகியூஷன் தரப்பு எதிரியும் ஆபீஸில் இருந்தோம்; ஏறக்குறைய 15 அல்லது 20 பேர் வீட்டிற்குள் வந்தனர்; அவர்கள் அச்சை எறிந்து, அங்கிருந்த சாமான்களைச் சேதப்படுத்தினர்; நான் மாடிக்குச் சென்று கூட்டம் போன பிறகே கீழே வந்தேன்; படங்கள், போட்டோக்கள் முதலியன உடைக்கப்பட்டிருந்ததை நான் பார்த்தேன்; வழக்குகள் சம்பந்தமான கட்டுகள் இறைக்கப்பட்டிருந்தன; இச்சம்பவத்தைப் பற்றி நான் வக்கீலிடம் போய்த் தெரிவித்தேன்; கூட்டத்தில் இருந்தவர்களில் யாரையும் நான் அடையாளம் கண்டுபிடிக்க முடியாது.”

## 70-வது சாட்சி

ஏ. ராமஸ்வாமி ஐயர் 70-வது சாட்சியாக விசாரிக்கப்பட்டார். அவர் சொன்னதாவது:—

“சென்ற மாதம் வரையிலும் வக்கீல் ஏ. வி. கிருஷ்ணசாமி ஐயர் ஆபீஸில் நான் குமாஸ்தாவாக இருந்தேன்; ஜூலை 15-ந் தேதி நான் புதுக்கிராமத்தில் உள்ள என்னுடைய வக்கீல் வீட்டில் இருந்தேன்; இந்த வீடு பெருமாள் கோவிலுக்குக் கிழக்கில் இருக்கிறது; காலை 9-30 மணி சுமாருக்கு ஏறக்குறைய 15 முதல் 20 பேர்கள் கிழக்கு நோக்கி விரைந்து வந்தனர்; இவர்கள் கோஷமிட்டனர், வீடுகள் மீது கற்களை வீசினர்; வக்கீல் வீட்டின் மீதும் கற்களை எறிந்தனர். கூட்டத்தில் எதிரி துரைசாமியைப் பார்த்தேன்; அவர் கையில் கழிகளும் கற்களும் இருந்தன; பிறகு போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் என்னை விசாரித்தார். இந்தக் கோர்ட்டில் நான் ஒருவரையும் அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை; என்னுடைய கண்பார்வைக் கோளாறே இதற்குக் காரணம்; இதே காரணத்தினால்தான் நான் வக்கீலிடம் வேலை செய்துகொண்டிருந்ததை விட்டு விட்டேன்; எனக்குக் கண்ணில் சதை வளர்ந்திருக்கிறது.”

பி. ஏ. தங்கசாமியால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது சாட்சி கூறியதாவது:—

“நான் துரைசாமியை அடிக்கடி பார்த்திருக்கிறேன்: அவருடைய வீடோ அன்றி அவர் எந்த வகுப்பைச் சேர்ந்தவர் என்றோ எனக்குத் தெரியாது.”

திரு. பி. ஏ. கந்தய்ய பிள்ளையால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது சாட்சி கூறியதாவது:—

“கதவுகள் மூடப்படவில்லை; வீட்டிற்கு முன்பாக திறந்த வெளி இருக்கிறது.”

## 71-வது சாட்சி

கே. முத்துசாமி ஐயர் 71-வது சாட்சியாக விசாரிக்கப்பட்டார். அவர் கூறியதாவது:—

“நான் புதுக் கிராமத்தில் 15-ம் நெம்பர் வீட்டில் வசிக்கிறேன்; இங்குதான் விக்டோரியா எக்ஸ்டென்ஷன் புதுக் கிராமத்துடன் சேருகிறது; ஜூலை 15-ந் தேதி காலை 9 மணி சுமாருக்கு நான் வீட்டிலேயே இருந்தேன்; சுமார் 15 பேர் கைகளில் கழிகள், கற்களுடன் வந்தனர்; அவர்கள், வீடுகள்மீது கற்களை எறிந்தனர்; ‘ஏன் இப்படி நடந்து கொள்ளுகிறீர்கள்?’ என்று ஒருவரைக் கேட்டேன்; ‘சங்கனில் ஏழு பேர்களைக் கொன்றுவிட்டார்கள்; ஆகவே நாங்கள் பழிக்குப் பழி வாங்கப் போகிறோம்’ என்று அவர்கள் சொன்னார்கள்; கூட்டத்தினர் பிறகு போய்விட்டனர்; நான் வீட்டிற்குள் போனேன்; மறுபடியும் சத்தம் கேட்டது; வெளியே வந்தேன்; சுமார் 20 பேர் தெற்குப் பக்கத்திலிருந்து கோஷமிட்டுக் கொண்டு, கைகளில், கழிகள், கற்களுடன் வருவதைப் பார்த்தேன்; நான்கு அல்லது ஐந்து வீடுகள் வரையில் அவர்களுடன் போனேன்; அவர்கள் பெருமாள் கோவில் சமீபத்தில் நின்றனர்; அங்கு மேலும் சிலர் அவர்களுடன் சேர்ந்தனர்; பிறகு அவர்கள் அங்கிருந்து சென்று விட்டார்கள்; அங்கு, 12-வது பிராசிகியூஷன் தரப்பு சாட்சியாகிய சங்கரநாராயண ஐயரைப் பார்த்தேன்; அவர், காயங்களுடன் ஒரு சந்து வழியாகத் தம்முடைய வீட்டிற்கு வந்து கொண்டிருந்தார்; காயங்களிலிருந்து ரத்தம் வந்துகொண்டிருந்தது; அவருக்கு நான் பூர்வாங்க சிகிச்சை செய்தேன்; பிறகு அவரை ஆஸ்பத்திரிக்குப் போகச் சொன்னேன்; 90-வது எதிரி சிவாசன், 91-வது எதிரி ராஜாமணி 88-வது எதிரி துரைசாமி ஆகியோரை நான் அடையாளம் கண்டுபிடிக்க முடியும்; அவர்கள் கூட்டத்தில் இருந்தனர்; அவர்களை தூத்துக்குடி உதவி சப்-மாஜிஸ்திரேட் கோர்ட்டில் நான் அடையாளம் கண்டுபிடித்தேன்.”

வழக்கறிஞர் திரு எம் செல்லையப்பபிள்ளை, குறுக்கு விசாரணை செய்த போது சாட்சி கூறியதாவது:—

“முதல் கூட்டத்தில் பார்த்தவர்களில் யாரும் எனக்கு ஞாபகம் இல்லை; இரண்டாவது கூட்டத்திலிருந்தவர்களைத்தான் நான் அடையாளம் கண்டுபிடிக்க முடியும்; எனக்குத் தெரிந்த மட்டில் கல் வீச்சினால் ஒருவரும் காயமுறவில்லை; 12-வது பிராசிகியூஷன் தரப்பு சாட்சியை பால்யம் முதல் எனக்குத் தெரியும்.”

வழக்கறிஞர் திரு. சுப்பிரமணியபிள்ளை குறுக்கு விசாரணை செய்தபோது சாட்சி கூறியதாவது:—

“போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் கிருஷ்ணய்யர் என்னுடைய உறவினர் அல்ல; நான் சாக்கடைக் குழாய் வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கிறேன்; இன்ஷ்யூரன்ஸ் தொழிலும் நடத்தி வருகிறேன்; எஸ். வி. சுப்பிரமணிய நாடாரை கடந்த இரண்டு ஆண்டுகளாக எனக்குத் தெரியும்; 88-வது எதிரி, சுப்ரமணிய நாடார் கிடங்கில் வேலை செய்தாரென்பது எனக்குத் தெரியாது; இந்தக் கிடங்கில் நான் சீட்டாடுவது வழக்கம் என்று சொல்லப்படுவதை மறுக்கிறேன்; ஜிம்கானா கிளப்பில்தான் நான் சீட்டாடுவது வழக்கம்; இக்கிளப்பில் நான் அங்கத்தினன்; 1-வது பிராசிகியூஷன் தரப்பு சாட்சியும் கிளப்பில் இரண்டு வருஷங்களுக்கு அங்கத்தினராக இருந்தார்; இப்போது அங்கத்தினர் அல்ல.”

---

## முயலுகிறோம்!

அருப்புக்கோட்டை, ஜன. 12—மத்திய அரசாங்க ரயில்வே இலாகா துணை அமைச்சர் ஓ. வி. அளகேசன் இந்து பேசுகையில், அருப்புக்கோட்டைக்கு ரயில் போக்குவரத்து வசதி அளிப்பது பற்றிய திட்டத்தை ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்ப்பதாகக் கூறினார்.

---

## திருச்செந்தூர் தி. மு. கழகம்

7—1—54ல், தோழர் இரா. மயிலோதன் தலைமையில் நடைபெற்ற செயற் குழு கூட்டத்தில், தூத்துக்குடி நிதிக்கு 13-1-54க்குள் நிதி பிரித்து மாவட்டச் செயலாளர் வசம் அளிப்பதென்றும், 30—1—54ல் பொங்கல் விழா கொண்டாட தோழர் சி. பி. சிற்றரசை அழைப்பதென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

---

## பம்பாய் மாவட்ட தி. மு. கழகம்

1—1—54-ல், பம்பாய் மாவட்டக் கழகப் பிரதிநிதிகளின் கூட்டம் தோழர் எஸ். தியாகராசன் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, தோழர்கள் க. வள்ளிநாயகம் மாவட்டச் செயலாளராகவும், சி.த.மு. இரா. அரிபசங்கரன் துணைச் செயலாளராகவும், க. மன்னூர் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

* * *

6-1-54-ல், பம்பாய், தாராவி தி. மு. கழக செயற்குழுக் கூட்டம் தோழர் மா. அண்ணாமலை தலைமையில் நடைபெற்றது. 14—1—54-ல், பொங்கல் விழா பொதுக்கூட்டம் வாழைக்கட்டவாடித் திடலில் நடத்துவதென்றும், விழாவிற்குத் தலைவராக தோழர் ஏ. எஸ். ஆறுமுகம் அவர்களையும், வரவேற்பாளராக செல்லை இரா. இளம்வழுதி அவர்களையும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

---

## பெங்களூர் தி. மு. கழகம்

“திராவிடர் திருநாளாகிய பொங்கல் பெருநாளன்று பிளாக்பள்ளி தி. மு. க.-வினர், வறுமையில் வாடும் ஏழை மக்களுக்குக் கஞ்சி வழங்கி இவ்வாண்டின் நற்பணிகளைத் துவக்க முடிவு செய்துள்ளனர். அதன்படி அன்று காலை 11 மணியளவில் சுமார் 400 ஏழை மக்களுக்குக் கஞ்சி வழங்கப்படும்.

கழகத்தின் பொதுக் குழு 17—1—54 அன்று மாலை 4 மணியளவில், அப்பாவு பிள்ளை பெண்கள் பாடசாலையில் கூட்டுவதெனவும், முடிவு செய்யப்பட்டுள்ளது.

தூத்துக்குடி நிதிக்கு கழகத்தின் மூலம் வசூலிக்கப்பட்ட தொகையைப் பொங்கலன்று பெரியார் நகரில் பேருரை நிகழ்த்த வரும் தோழர் ஆசைத்தம்பி அவர்களிடம் ஒப்படைப்பதென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது,” என்று துணைச் செயலாளர் இரா. தே. செல்லையா அறிவிக்கிறார்.

---

## தேனூர் தி. மு. கழகம்

6—1—54-ல் நடைபெற்ற மதுரை மாவட்டம் தேனூர் தி. மு. க. கிளைக் கழக நிர்வாகிகள் தேர்தலில், தோழர்கள்: பூ. குருசாமி செயலாளராகவும், மா. அருணாசலம் துணைச் செயலாளராகவும், டி. எஸ். பஞ்சவர்ணம் பொருள் காப்பாளராகவும், மு. பெரியசாமி விளம்பர உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

---

## மஜீத் நினைவுப் படிப்பகம்

மதுரை, ஜன. 12—

மஜீத் நினைவுப் படிப்பகத்தின் உறுப்பினர்கள் கூட்டம் தோழர் பெ. சேவகரத்தினம் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, செயலாளர் கலைச்செல்வனின் விலகல் கடிதம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, புதிய செயலாளராக தோழர் எஸ். பழனிச்சாமி தேர்ந்தெடுக்கப்பட்டார். உறுப்பினர் தோழர் ராமநாதன் என்பவர் கருணாநிதி படிப்பகத்திலிருந்து நீக்கப்பட்டார். தோழர்கள் மு. மனோகரன், வீ. மாணிக்கம் ஆகியோர் பேசினர். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

# தமிழகமெங்கும் திராவிடர் திருநாள்

★

## சென்னை

★

### காஞ்சிபுரம் (சென்னை-13)

கலாமன்றம்

14—1—54 காலை 8-30 மணிக்கு, எஸ்.என். செட்டி தெரு, சிங்காரவேலர் மைதானத்தில், தோழர் வி. நடராஜன் தலைமையில் விழா நடைபெறும். அவ்வமயம், தோழர்கள் பி. தங்கராஜ், எம். சி., டி. லட்சுமிராமன், கு. சந்திரன், என். சண்முகனார், எம். ஆர். சி. ராமச்சந்திரன், டி. ராஜாபாதர், எம். நாராயணசாமி, ர. பொன்னுரங்கம், எம். டி. செல்வம், மற்றும் பலர் பேசுவர். இன்னிசை முடிந்தவுடன் தேநீரும், சிறுவர்களுக்குத் தின்பண்டங்களும் வழங்கப்படும்.

★

### குயப்பேட்டை

14-1-54 காலை 9 மணிக்கு, தி. மு. கழக அலுவலகத்தில் விழாவை முன்னிட்டு கூட்டம் நடைபெறும். தோழர் பி. மணி தலைமையில், தோழர்கள் ஆர். டி. அரசு, டி. கே. கண்ணையன், பி. திருவேங்கடம் ஆகியோர் பேசுவர். சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்படும். தி. மு. கழக இரவுப்பள்ளி மாணவர்களுக்கு பரிசு வழங்கப்படும்.

★

### மீர்சாகிப்பேட்டை

14-1-54 காலை 8 மணிக்கு, கழகக் கட்டிடத்தில், 'திராவிடர் திருநாள்' பற்றி தோழர் ஆரங்கசாமி தலைமையில், தோழர்கள் கொ. இளவரசு, இளம்பரிதி, மு. புரட்சிமணி, டி. ஏ. துரை, இரா. சண்முகம், மற்றும் பலர் பேசுவர். பிற்பகல் 1 மணிக்கு ஏழைகளுக்கு உணவு அளித்தல், சிறுவர்களுக்கு இனிப்பு வழங்குதல் போன்ற மற்ற நிகழ்ச்சிகளிலும் கழகத் தோழர்கள் வந்து கலந்துகொள்ளுமாறு 43-வது வட்ட செயலாளர் மு. புரட்சிமணி கேட்டுக் கொள்கிறார்.

★

### சிந்தாதிரிபேட்டை

14-1-54 காலை 9 மணிக்கு, அ. பொ. அரசு தலைமையில் விழா நடைபெறும். முகவை ஆர். எஸ். பாண்டியன், வி. எஸ். கோவிந்தராசன் ஆகியோர் பேசுவர். பகல் 12 மணிக்கு ஏழைகளுக்கு உணவு வழங்கப்படும்.

★

### வண்ணை தமிழ் கலைக் கழகம்

இக்கழகத்தின் மூன்றாவது ஆண்டு விழாவும், பொங்கல் விழாவும் கழகக் கட்டிடத்தின் எதிரே அமைந்துள்ள திரு. வி. க. பந்தலில் 14—1—54 அன்று காலை 8-30 மணிக்கே விழாவின் நிகழ்ச்சிகள் தொடங்கும். தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், க. அன்பழகன், பி. மனோகரன், கே. எம். கண்ணபிரான், கே. என். குருசாமி, வி. பி. கோவிந்தசாமி ஆகியோர் பேசுவர்.

★

### சென்னை முத்தமிழ கலை மன்றம்

14—1—54 பிற்பகல் கலை, இம்மன்றத்தின் சார்பில திராவிடர் திருநாள் விழா நடைபெறும். தோழர் கே. இ. சம்பந்தம் தலைமை வகிப்பார்.

★

### 'பணம்' நாடகம்

17-1-54 ஞாயிற்றுக்கிழமை திருவொற்றியூர், வாலிப முன்னேற்ற ஒற்றுமைக் கழகக் கல்வி நிலையம், கலை வளர்ச்சி மன்றம் நிதிக்காக, கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், மதுரம் நடிக்கும் 'பணம்' நாடகம், திருவொற்றியூர் சீனிவாச டாக்கீசில் நடைபெறும்.

★

### வரலாற்றில் திராவிடர்

ஜன. 13, 14-ந் தேதிகளில், தோழர் க. அப்பாதுரையார் தலைமையில், இராயபுரம், மாதாகோயில் மைதானத்தில், தோழர் மகராஜன் ராஜா சோணாதைரிய முதலியார் அவர்கள், 'திராவிடர்களின் சரித்திரம், நாகரீகம், சிறந்த மொழி' இவைகள் பற்றி விளக்கவுரையாற்றுவார்.

### செயங்கொண்டம்

14-1-54 மாலை 4 மணிக்கு காந்தி பூங்காவில், உடற்பயிற்சி விளையாட்டுகளும்; 15-1-54 மாலை 3 மணிக்கு, கைப்பந்து ஆட்ட இறுதிப் போட்டியும், 16—1—54 மாலை 4 மணி முதல் 6 மணி வரை தோழர் அ. மருதகாசி தலைமையில் இன்னிசையும், இரவு 7-30 மணிக்கு புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தலைமையில், தோழர்கள் மு. அண்ணாமலை, ந. பிச்சமுத்து மற்றும் பலர் 'பொங்கல் விழா' என்பதுபற்றியும் சொற்பொழிவாற்றுவர்.

★

### தென்னூர்

16-1-54 மாலை 7 மணிக்கு, ஏ. செம்பு நயினார் தலைமையில் தி. மு. கழக ஆரம்பக் கூட்டம் நடைபெறும். பேராசிரியர் சுப்ரமணியம், டாக்டர் பி. வேதாந்தம், ஏ. கருத்தோவியன், எம் சாந்திநாதன் ஆகியோர் பேசுவர்.

★

### அறந்தாங்கி

16—1—54 மாலை 5 மணிக்கு, வ. உ. சி. திடலில், திராவிடர் திருநாள் கூட்டம், மு. சீனிவாசன் தலைமையில் நடைபெறும். குடந்தை என். கே. சாமி, மற்றும் பலர் பேசுவர்.

★

### காசிப்பட்டணம்

16—1—54 ஞாயிறு இரவு 8 மணியளவில், நடு மைதானத்தில், திராவிடர் திருநாள் கூட்டம் நடைபெறும். உடுமலை நாராயணன், பொள்ளாச்சி ராமானுசம் ஆகியோர் பேசுவர்.

★

### ச. வி. நகரம்

17—1—54 ஞாயிறு மாலை
பேசுபவர்: எஸ். எஸ். தென்னரசு

★

### கடலூரில் திராவிடர் திருநாள்

16—1—54 சனி காலை 9 மணிக்கு

இடம்: நியூ சினிமா

தலைவர்: தில்லை-வில்லாளன்

பேசுவோர்:
மு. கருணாநிதி
அருண்மொழி

கட்டணம்: அணா 8, 4

★

16—1—54 சனி மாலை 5 மணிக்கு

தலைவர்:
ஏ. கோவிந்தசாமி, எம். எல் ஏ.

பேசுவோர்:
சி. என். அண்ணாதுரை
கே. ஏ. மதியழகன்
சி. வி இராசகோபால், எம் சி.

வரவேற்பாளர்:
இரே. இளம்வழுதி

### இராமனாதபுரம் புதூர்

இவ்வூர் தி. மு கழகக் கிளையின் சார்பில், பொங்கற் புது நாளை முன்னிட்டு, தி. மு. கழகக் குழுவினரால், 'காதல் ஜோதி' என்னும் நாடகம், 16-1-54 அன்று நடைபெறும்.

★

### பொய்கை நல்லூர்

17—1—54 ஞாயிறு மாலை 6 மணிக்கு, பரவை திடலில் பொதுக்கூட்டம் நடைபெறும். குடந்தை என். கே. சாமி பேசுவார்.

★

### திருவெண்காடு

17—1—54 மாலை 5 மணிக்கு, கீழ வீதியில், கே. ஆர். சம்பந்தம் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும். ஈ. வி. கே. சம்பத், ஆர். பாலகுருசாமி ஆகியோர் பேசுவர்.

★

### புதுப்பட்டியில் நாடகம்

16-1-54 இரவு 8 மணிக்கு, புதுப்பட்டி தி. மு. கழகத்தினர், வள்ளுவர் மன்றத்தில், 'இரு கொலை' எனும் நாடகத்தை நடத்துவர். தோழர் வி. சிவப்பிரகாசம் தலைமை தாங்குவார்.

★★★★★★★★★★★★

### தூத்துக்குடி சுற்றுப்புற கிராமத்திலுள்ள தோழர்கட்கு

"தூத்துக்குடிக்கு, 24—1—54 ஞாயிறு அன்று பொதுச் செயலாளர் தோழர் அண்ணாதுரை அவர்கள் வருகிறார். அன்று மாபெரும் ஊர்வலமும், வரவேற்பும், பொதுக்கூட்டமும், நிதி அளிப்பும் நடைபெறும். நிதி கொடுக்க விரும்பும் தோழர்களும், வரவேற்பு கொடுக்கும் தோழர்களும் 20-1-54-க்குள் நகர தி. மு. கழக பொறுப்பாளர் எம். ரத்தினம் அவர்களிடம் தெரியப்படுத்திக்கொள்ள வேண்டுகிறேன்," என்று, வரவேற்புக் கமிட்டி பொறுப்பாளர் தோழர் எம். ரத்தினம் அறிவிக்கிறார்.

★★★★★★★★★★★★

இந்திய சிமிட்டி உற்பத்தி சாலைகளின் உற்பத்தி சக்தி ஆண்டிற்கு 42.85 லட்சம் டன்னாகும்.


பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!

பாலிசிதாரர்களுக்கும், பங்குதாரர்களுக்கும், வைத்தியப் பரிசோதகர்களுக்கும், மற்றும் சொசைடியின் ஆதரவாளர்களுக்கும்

இத்தமிழர் திருநாளன்று எங்கள் பொங்கல் வாழ்த்துக்கள்

★

ஜீவிய—மோட்டார்—தொழிலாளர் விபத்து நஷ்ட ஈடு—இன்ஷ்யூரன்சுக்கும், ஊழியமுள்ள பிரதிநிதித்துவத்திற்கும்

இந்தியா லைப் அண்டு ஜெனரல் அஷ்யூரன்ஸ் சொசைடி லிமிடெட்

தலைமைக் காரியாலயம்: கோயமுத்தூர்

★

ஓங்கி வளர்ந்துவரும் ஓர் தென் இந்திய நிலையம்.

ஸ்ரீ. M. S. பழனியப்ப முதலியார், B. A.,
—சேர்மன் & மானேஜிங் டைரெக்டர்

ஸ்ரீ. C. R. சிவசுப்ரமணியம், B. A., காரியதரிசி.


## தூக்குப் போட்டுக் கொள்ள ஆச்சாரியாருக்கு ஆசை

'நூல் மாலையையே அதற்குப் பயன்படுத்துவேன்,' என முன்னறிவிப்பு!

சென்னை, ஜன 11—

மந்திரிகளுக்கு மாலை போடுவதை, விருந்துகள் அளிப்பதை ஒழிப்பது பற்றி சட்ட சபையில் சரமாரியான கேள்விகள் கேட்கப்பட்டன.

ஆச்சாரியார் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் சொன்னதாவது:

'வாசனையுள்ள கூடிய மலர் மாலை எனக்குப் பிடிக்காது; ஜரிகை மாலையும் கூடாது; நூல் மாலைதான் சரி. அக்குப் போட்டுக்கொள்ள நான் எப்போதாவது விரும்பினாலும், இதுபோன்ற நூல் மாலைதான் பயன்படும்," என்றார்.

## வனவாசியில் நெடுஞ்செழியனுக்கு வரவேற்பும்—பாராட்டும்

வனவாசி, ஜன. 13—

7-1—54-ல், மேற்கு வனவாசி நெசவாளர் கூட்டுறவு சங்கக் கட்டிடத்திற்கு எதிரில் உள்ள மைதானத்தில், தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு வனவாசி தி. மு கழக சார்பில் வரவேற்பிதழ் வாசித்தளிக்கப்பட்டு, மலர்மாலை சூட்டப்பட்டது. கூட்டத்திற்கு தோழர் ப. வேலாயுதம் தலைமை வகித்தார். தோழர்கள்: இ. ஆர். கிருஷ்ணன், ப. கண்ணன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

இறுதியில் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தனக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்தும், தற்கால அரசியல் நிலை குறித்தும், "புதிய கல்வித் திட்டம், கிராம மக்களை குலத்தொழில் செய்யும்படி தூண்டும் வர்ணாசிரமத் திட்டத்தை பாதுகாக்கத்தான் பயன்படும்" என்றும் பேசினார்.

### கிண்டி மாவட்ட தி. மு. கழகம்

இலங்கை, ஜன. 11—

3—1—54ல், உறுப்பினர் கூட்டம் தோழர் நடராசா தலைமையில் நடைபெற்றது. சென்ற ஆண்டு வரவு-செலவு கணக்குகள் ஒப்புக்கொள்ளப்பட்டன. பின், தோழர்கள் இ. வள்ளுவதாசன் செயலாளராகவும், க. ப. இளம்வழுதி துணைச் செயலாளராகவும், ஏ. பி சாமிநிதி செயலாளராகவும், ஏ. எஸ். மணியம் விளம்பர உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தோழர்கள் க. ப. இளம்வழுதி, ஏ எஸ். மணியம், சேவுகதாஸ், மதியழகன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

இவ்வாண்டில், சிறந்த முறையில், திராவிடர் திருநாளான பொங்கல் விழாவைக் கொண்டாடுவதெனத் தீர்மானிக்கப்பட்டு, தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

### பிறப்பு

கல்லூரணி தோழர் சி. பெரியசாமியின் துணைவியார் 29-12-53 அன்று ஓர் பெண்மகவுக்குத் தாயானார். அதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 1 அன்பளிப்பாக அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றியுடையது—பொறுப்பாளர்.

### என். வி. நடராசன் சுற்றுப் பயணம்

| | | |
|---|---|---|
| ஜன. | 14 | சென்னை |
| ,, | 15 | சேலம் |
| ,, | 16 | குண்டலேரி (ஆற்காடு) |
| ,, | 17 | அண்ணாமலை நகர் |
| ,, | 18 | வேட்டவலம் |
| ,, | 19 | திமிரி |
| ,, | 20 | சென்னை |
| ,, | 21 | ஒண்டிப்புதூர் |
| ,, | 24 | குன்னத்தூர் (திருப்பூர்) |

### மு. கருணாநிதி தற்போதைய முகவரி

★

மு. கருணாநிதி,
தெற்கு வீதி, திருவாரூர்

### வரப்பெற்றோம்

திருச்சி பாலக்கரை ஸ்டீம் பீடி கம்பெனியார் அனுப்பிய காலண்டர்கள் கிடைக்கப் பெற்றோம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, குறிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.